[1978 செப்டம்பர் 12

[முற்பகல் 9-10]

திரு. ரா. கிருஷ்ணன் : இந்தப் பிரச்சினையைத் தீர்க்கிற விதத்தில் ஆதாயம் இருக்கக்கூடிய நிலையில் கவனிக்கப்படும் என்று கூறப்படுகிறது. ஆனால் அதை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்வதால் பல்வேறு சிக்கல்கள் உருவாகும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். காரணம் என்னவெனில், இந்தக் கம்பெனியைப் பொறுத்தவரையில் மிக அதிகமான வேலைப் பளு இருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்பதோடு, அந்த வேலைப் பளுவைக் கட்டாயமாக வாங்குகிற போக்கு அந்த டி.இ. யிடம் இருப்பதையும் அதனால் பல்வேறு சிக்கல்கள் உருவாவதையும் கவனித்து இதற்கு உடனடியாகத் தீர்வு காண ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பிரச்சினை பேசித் தீர்க்கப்பட வேண்டிய ஒன்று.

விக்கிரமசிங்கபுரம் கூட்டுறவு நாணய சங்கம்.

* வினா எண். 153—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி மன்ற பகுதியில் உள்ள கூட்டுறவு நாணய சங்கத்தில் பணம் கையாடல் நடைபெற்றுள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) திருநெல்வேலி மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி மன்றப் பகுதியில் உள்ள கூட்டுறவு நாணய சங்கங்களில் கையாடல் ஏதும் நடைபெறவில்லை.

(ஆ) கையாடல் ஏதும் இல்லாததால் நடவடிக்கை ஏதும் இல்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : இந்தச் செய்தி பத்திரிகையில் வெளிவந்துள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பத்திரிகை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் அது பரிசீலிக்கப்படும்.